**<u>செய்தி வெளியீடு எண்.699</u>** **<u>நாள்.29.10.2007</u>**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாட்டில் தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்காக மொத்தம் 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் இயங்குகின்றன. தருமபுரி மாவட்டத்தில் செல்லியம்பட்டியில் உள்ள அரசு மறுவாழ்வு இல்லத்தில் காவலராக பணிபுரிந்து வந்த திரு. கே. வி. சிகாமணி என்பவர் பணிக்காலத்தில் காலமாகி விட்டதால், அவருடைய மனைவி திருமதி எம். மகேஸ்வரி என்பவருக்கு கருணை அடிப்படையில் செல்லியம்பட்டி அரசு மறுவாழ்வு இல்லத்தில் காவலர் பணியிடம் வழங்கி அரசு ஆணைப் பிறப்பித்துள்ளது.

மேலும், திருவண்ணமலை மாவட்டத்தில் மல்லவாடியில் உள்ள அரசு மறுவாழ்வு இல்லத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்து, பணிக்காலத்தில் காலமாகி விட்ட திரு ஏ. பரசுராமன் என்பவரின் வாரிசான அவரின் மனைவி திருமதி ப. துளசிக்கு கருணை அடிப்படையில் சேலம் மாவட்டம் தேவியாகுறிச்சியில் உள்ள அரசு மறுவாழ்வு இல்லத்தில் சமையலர் பணியிடம் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

மேலும், காஞ்சீபுரம் மாவட்டம் பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் காலவராக பணிபுரிந்து வந்த திரு அ. ஞானசேகரன் பணிக்காலத்தில் காலமாகி விட்டதால், அவரது மனைவி திருமதி ஜி. ரீட்டாவுக்கு கருணை அடிப்படையில், பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் சமையலராக பணியிடம் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

இந்த மூவருக்கும் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் டாக்டர். திருமதி. பூங்கோதை அவர்கள் இன்று (29–10–2007) வழங்கினார்கள்.

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.